

தூத்துக்குடி வடக்கு மாவட்டம் கடம்பூர் பேரூராட்சி கே.சிதம்பராபுரம் பகுதியில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த சுமார் 200க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க. பஞ்சாயத்து தலைவர் திருமதி. சீதாலட்சுமி மற்றும் கண்டி சுப்புராஜ் ஆகியோர் தலைமையில், சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சரும் தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளருமான திருமதி. பி. கீதாஜீவன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் கயத்தாறு கிழக்கு ஒன்றியச் செயலாளர் சின்னப்பாண்டியன், ஒன்றிய அவைத் தலைவர் குருசாமி, கோவில்பட்டி நகரமன்ற தலைவர் கருணாநிதி, கடம்பூர் பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் நாகராஜா, பேரூர் செயலாளர்கள் சுரேஷ் கண்ணன், பாலகுமார், கயத்தாறு பேரூராட்சித் தலைவர் திருமதி சுப்புலட்சுமி ராஜதுரை கடம்பூர் பேரூராட்சி தலைவர் திருமதி. ராஜேஸ்வரி நாகராஜா, மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் அய்யாதுரை, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் விஸ்வநாத ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் குருராஜ் உள்ளிட்டோர் உள்ளனர்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழாவை யொட்டி மாபெரும் சிறப்பு கருத்தரங்கை மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தொடங்கி வைத்தார். இக்கருத்தரங்கில் சட்டமன்ற தி.மு.க கொறடா கோவி.செழியன், எம்.எல்.ஏ., டாக்டர் எழிலன் நாகநாதன், எம்.எல்.ஏ., கோவை நாகநந்தினி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுகின்றனர்கள். அருகில் பகுதி செயலாளர் வே.கருணாநிதி, கழக தகவல் தொழில் நுட்ப அணி துணைச் செயலாளர் அ. தமிழ்மாறன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ரவிச்சந்திரன் மற்றும் துணை அமைப்பாளர் உள்ளிட்டர் உள்ளனர்

### அருந்ததியினருக்கு உள் ஒதுக்கீடு : உச்ச நீதிமன்றத் தீர்ப்பு – முதல்வருக்கு நன்றி!

# முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்!

## தமிழ்நாடு முழுவதும் திருவுருவப் படத்திற்கு ஆதிதிராவிடர் நலக் குழுவினர் மலரஞ்சலி! ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக. 6 -

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில நிர்வாகிகள் கூட்டம், நேற்று (5.8.2024), சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், ஆதிதிராவிடர் நலக் குழுச் செயலாளர் ஆ. கிருஷ்ணசாமி, எம்.எல்.ஏ., தலைமையில், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவர் அமைச்சர் மா.மதிவேந்தன், இணைச் செயலாளர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், புஷ்பராஜ், வி.பி. இராசன், திப்பம்பட்டி ஆறுச்சாமி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் பி. துரைசாமி, சி.தசரதன், மாரியப்பன் கென்னடி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட தீர்மானங்கள் பின்வருமாறு

"சமூகநீதியின் தொட்டில்" என்றழைக்கப்படும் தமிழ் நாட்டில், ஒடுக்கப்பட்ட இனத்தின்மீது, குறிப்பாக ஆதிதிராவிடர்மீது ஆதிக்கச் சக்திகள் பல்முனைத் தாக்குதல் நடத்திய போதெல்லாம், அதனை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்து, போராடி வெற்றி பெற்று சமூகநீதியை காத்து வருவதோடு, கீழ்த்தட்டு மக்களை கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் ஆகியவற்றில் மேலே கொண்டு தொடர்ந்து போராடி வரும் தி.மு.கழகத்தின் தலைவரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு - தமிழ்நாடு முதலமைச்சராக இருந்தபோது, "பள்ளத்தில் கிடப்போரைப் படிகளில் ஏற்றி வைக்க; பணி புரிவோம் தொடர்ந்து!" என்று சொன்னதோடு நிற்காமல், அருந்ததியக்கான 3 சதவிகித உள்ஒதுக்கீடு என்ற சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி, அதனை நடைமுறைப்படுத்தினார்.

இந்த உள்ஒதுக்கீட்டின் காரணமாக, காலங்காலமாக அடக்கி வைக்கப்பட்ட அருந்ததியர் இன மக்கள் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் முன்னேற்றம் அடைந்ததோடு, சமூக பொருளாதார முன்னேற்றம் அடைந்தனர்.

அருந்ததியருக்கு அளித்த உள்ஒதுக்கீட்டினை பொறுத்துக் கொள்ளாதவர்கள் இச்சட்டம் செல்லாது என்று அறிவித்திட வேண்டுமென அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாக்கப் பட வேண்டும் என்பதற்காக, மூத்த வழக்கறிஞர்கள் நியமித்து திறம்படக் கருத்துக்களை எடுத்துரைத்து, அந்த முன்னெடுப்புகளால் "அருந்ததியருக்கான உள் ஒதுக்கீடு செல்லும்" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெற்றுத் தந்த 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையில் அடிப்படையில் "திராவிட ஆட்சி" நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழுவின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தனது பாராட்டுக்களையும், மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.'

அருந்ததியர் உள் இடஒதுக்கீட்டு எதிரான வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்ற போது, அருந்ததியர் உள் இட ஒதுக்கீடு பாதுகாக்கப்பட்டே ஆக வேண்டும் என்ற உறுதியுடன், மூத்த வழக்கறிஞர்கள் நியமித்து, அவர்கள் வாதாடி, அந்த முன்னெடுப்புகளால் "அருந்ததியருக்கான உள் ஒதுக்கீடு செல்லும்" என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை உச்சநீதிமன்றத்தில் பெற்றுத் தந்த 'எல்லோருக்கும் எல்லாம்' என்ற கொள்கையில் அடிப்படையில் "திராவிட ஆட்சி" நடத்தி வரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஒப்புதல் பெற்று, அவருக்கு தி.மு.க. ஆதிதிராவிடர் நலக் குழுவின் சார்பில் பிரம்மாண்டமான ஒரு மாபெரும் பாராட்டுக் கூட்டம் நடத்துவதென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவு நாளான ஆகஸ்ட் 7-ஆம் தேதி அன்று மாவட்டம், ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் என அனைத்து இடங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படம் மற்றும் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திட வேண்டுமென மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு நிர்வாகிகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

கேரளா மாநிலம், வயநாடு மலைப்பகுதியில் நிலச்சரிவில் சிக்கி உயிரழந்த மக்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்வதோடு,ம் வயநாடு நிலச்சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பாக ரூ. 5 கோடி நிவாரண நிதி வழங்கிய நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி இக்கூட்டம் தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

ஆதிதிராவிடர் நலக்குழு ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளை நியமனம் செய்வது தொடர்பாக, அந்தந்த மாவட்ட அமைப்பாளர்கள், தத்தமது மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்களை தொடர்பு கொண்டு, நிர்வாகிகள் பட்டியலை விரைந்து பெற்று, மாநிலச் செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டுமென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கலைஞர் நினைவு நாள்! கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணியில் திரளாகப் பங்கேற்பீர்!

# சென்னை வடக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிக்கை!



சென்னை, ஆக. 6 -

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை வடக்கு மாவட்டம் முழுவதும் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தி சென்னையில் மாண்புமிகு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில்நடைபெற உள்ள அமைதிபேரணியில் ஆயிரக்கணக்கில் அலை கடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்கு பின்னால் ஜனநாயக பேரியக்கமான தி.மு.கவை 50 ஆண்டு காலம் தனது அயராத உழைப்பால் கட்டி காத்து கழகத்தை எஃகு கோட்டையாக்கி , கழகத் தொண்டர்களை கண்ணிமை போல் காத்த ஓய்வறியா உழைப்பாளி தாம் போட்டியிட்ட 13 சட்டமன்ற தொகுதிகளிலும் சட்டமன்ற உறுப்பினராக மகத்தான வெற்றியை பெற்ற சாதனை நாயகர்.

5 முறை தமிழக முதலமைச்சராக சிறப்பான முறையில் பார் போற்றும் வகையில் பணியாற்றி தமிழக அனைத்து மக்களுக்காக அரும்பாடு பட்டு எண்ணிலடங்கா முற்போக்கு சட்டங்களையும் இந்தியாவிலேயே முன்னோடி திட்டங்களையும் நிறைவேற்றி பொற்கால ஆட்சி தந்த சாதனையா ளர் ,தமிழகத்தின் நவீன சிற்பி.

இன்றைக்கும் மறைந்தும் மறையாமல், தமிழக மக்களின் இதயங்களில் நீக்கமற நிறைத்திருக்கும் நம்முடைய உலக தமிழினத்தின் தனிப் பெரும் தலைவர், பல இந்திய பிரதமர்கள் குடியரசு தலைவர்களைஉருவாக்கி,இந்திய அரசியல் வரலாற்றில் நீங்கா இடம் பெற்ற ஒப்பற்ற தலைவர்.

இந்திய ஜனநாயகத்தின் காவலராக திகழ்ந்த, இந்தியாவின் மூத்த அரசியல் தலைவர், இலக்கியம் கவிதை, இதழியல் நாடகம், திரைப்படம் மேடைபேச்சு, அரசு நிர்வாகம், கட்சி நிர்வாகம் என தொட்ட துறைகள் அனைத்திலும் வெற்றி முத்திரையை பதித்த, பன்முக திறன் கொண்ட படைப்பாளர், நூற்றாண்டு விழா நாயகர் நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர்,

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6வது நினைவு நாளையொட்டி முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆகஸ்ட் 7 ஆம் தேதி புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணாசாலை,ஓமந்தூரரார் வளாகத்தில் அமைத்துள்ள முத்தமி ழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடம் வரை அமைதி பேரணி நடைபெற உள்ளது. இதில் சென்னை வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டு அமைதி பேரணியில் பங்கேற்க வேண்டும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு ஆகஸ்ட் 7 ஆம் தேதி ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு மேலும் புகழ்சேர்க்கும் வகையில், சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வட்டங்களிலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்தை மலர்களால் அலங்கரித்து கழகத்தினர்அனைவரும் அண்ணாரது படத்திற்கு மலர்தூவி மலர் அஞ்சலி செலுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் 6வது நினைவு நாளினையொட்டி

# முதலமைச்சர், கழகத் தலைவர் தலைமையில் அமைதிப் பேரணி!

## தொண்டர் அணித் தோழர்களுக்கு தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் வேண்டுகோள்!

சென்னை, ஆக.6

தி.மு.க. தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழகத்தின் ஐந்து முறை முதலமைச்சராக உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாட்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழக வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக் கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 6வது நினைவுநாளான ஆகஸ்ட் 7, புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திட தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ள "அமைதிப் பேரணி"யில் சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் வடக்கு, திருவள்ளூர் தெற்கு, திருவள்ளூர் மத்திய ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர் அணியினர் ஆகஸ்ட் 7 அன்று காலை 6.00 மணியளவில் சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகில் கருப்புசிவப்பு சீருடை அணிந்து தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# ஐ.டி.ஐ.யில் பயிற்சி முடித்த 2310 மாணவர்களுக்கு பணியமர்வு ஆணைகள்!

## தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார்!

சென்னை, ஆக. 6-

தமிழ்நாட்டில் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும், இளைஞர்களின் வேலை வாய்ப்புத் திறனை மேம்படுத்திடவும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. தொழில் வளர்ச்சிக்கு தேவையான திறன் மிக்க மனித வளத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதில் தொழிற்பயிற்சி நிலையங்கள் (ஐ.டி.ஐ.கள்) முக்கிய பங்கு வகிக்கின்றன.

இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயின்று முன்னனி நிறுவனங்களில் பணி நியமனம் பெற்ற மாணவர்களுக்கும், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம்பணி நியமனம் பெற்றவர்களுக்கும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் பணிநியமன ஆணை அரசு தொழிற்பயிற்சி நிலையம், கிண்டி வளாகத்தில் நேற்று (5.8.2024) நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கப் பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த ஆண்டு 71 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் தொழில் 4.0 தரத்திலான தொழில்நுட்ப மையங்களாக மேம்படுத்தப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டன. அத்தொழில் நுட்ப மையங்களில் ஓராண்டு பயிற்சி நிறைவு செய்து 50 முன்னணி நிறுவனங் களில் பணிநியமனம் பெற்ற 2310 மாணவர்களுக்கு பணியமர்வு ஆணை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி - 2A ல் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 156 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

2024-25 ஆம் ஆண்டிற்கான சட்டப்பேரவை அறிவிப்பின்படி 32 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு தொழிற் பிரிவில் உள்ளகருத்தியல் பாடங்களை எளிதில் கற்றுக்கொள்ளும் வகையில் இணைதள வசதியுடன் கூடிய ஸ்மார்ட் டிவி வழங்கப்பட்டது.

7வது மாநில அளவிலான படைப்புத்திறன் போட்டியில் வெற்றி பெற்ற 16 ஐ.டி.ஐ. பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது. மேலும் பொதுமற்றும் தனியார் கூட்டமைப்புத் திட்டத்தின்கீழ் 2022-23 ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழிற் பயிற்சி நிலைய நிறுவன பங்குதாரர், சிறந்த மேலாண்மைக் குழுத் தலைவர் மற்றும் சிறந்த அரசு தொழிற் பயிற்சி நிலையத்திற்கான விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அரசு செயலாளர் கொ.வீரராகவராவ், வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் எ.சுந்தரவல்லி, அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### குழப்பத்திற்கு மறு பெயர் 'நீட்' தேர்வு!

# 'நீட்' தேர்வு வேண்டாமெனும் மாநிலங்களுக்காவது விலக்களிக்க வேண்டும்!

## 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தல்!

சென்னை, ஆக. 6–

குழப்பத்திற்கு மறுபெயரான 'நீட்' தேர்வை முழுமையாக ரத்து செய்ய வேண்டும் அல்லது 'நீட்' தேர்வு வேண்டாமென்று கூறும் மாநிலங்களுக்கு மட்டுமாவது விலக்கு அளிக்க வேண்டும் என்று 'தினத்தந்தி' நாளேடு தலையங்கத்தில் வலியுறுத்தியுள்ளது.

அது வருமாறு:–





பிளஸ்–2 படித்து முடித்தவுடன் மருத்துவக்கல்லூரி மாணவர் சேர்க்கைக்காக அகில இந்திய அளவில் நடத்தப்படும் 'தேசிய தகுதிகாண் நுழைவுத்தேர்வு' என்று அழைக்கப்படும் 'நீட்' தேர்வினால் தமிழ்நாடு உள்பட பல மாநிலங்களில் மாணவர்கள் தற்கொலை செய்யும் சோகச்சம்பவங்கள் நடப்பது வாடிக்கையாகிவிட்டது. பிளஸ்–2 தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடப்பதே சாலச்சிறந்தது. 'நீட்' தேர்வுக்கும் பிளஸ்1 மற்றும் பிளஸ்2 பாடப்புத்தகங்களில் இருந்துதானே வினாக்கள் தயாரிக்கப்படுகின்றன. பிறகு இந்த தேர்வுக்கு என்ன அவசியம் வந்தது? என்று கேள்விகளும் எழுகின்றன. இந்த தேர்வில் ஒரு வெளிப்படைத் தன்மை இல்லை என்று பல கட்சிகளும் குற்றஞ்சாட்டுகின்றன. ஆனாலும், மத்திய அரசாங்கம் 'நீட்' தேர்வு வேண்டும் என்பதில் உடும்புப்பிடியாக பிடித்துக்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் 'நீட்' தேர்வின் மீது பல குறைகள் கூறப்பட்டாலும், இந்த ஆண்டு குறைகளின் உச்சத்துக்கே சென்றுவிட்டது. `நீட்' தேர்வை இந்த ஆண்டு நாடு முழுவதும் 23 லட்சத்து 33 ஆயிரத்து 297 பேர் எழுதியதாக கடந்த ஜுன் 4ம் தேதி வெளியான தேர்வு முடிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த முடிவில் பல குழப்பங்கள் இருந்தன. 67 பேர் முழு மதிப்பெண்கள் பெற்றதாக அறிவிக்கப்பட்டது, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. காரணம் இதற்கு முந்தைய ஆண்டுகளில் நடந்த தேர்வுகளில் முழு மதிப்பெண் பெற்றவர்களின் எண்ணிக்கை ஒற்றை இலக்கத்தில்தான் இருந்தது. இந்த தேர்வில் வினாத்தாள்கள் கசிந்ததாக ஆதாரத்துடன் புகார்கள் பெறப்பட்டு, வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. தற்போது அது சி.பி.ஐ. வசம் சென்று பலர் கைது செய்யப்பட்டும் வருகிறார்கள்.

நிறையப்பேர் உயர் மதிப்பெண்களை பெற்ற விவகாரத்தில், 1,563 பேருக்கு சிறு காரணங்களுக்கு கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டதாக 'நீட்' தேர்வை நடத்திய தேசிய தேர்வு முகமை தெரிவித்தது. இந்த நடைமுறைகளை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகள் தொடரப்பட்டன. சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி கருணை மதிப்பெண்கள் வழங்கப்பட்டவர்களுக்கு மறுதேர்வும் நடத்தப்பட்டது. அந்த 1,56,3 பேரில் 813 பேர் தான் அந்த தேர்வை எழுதினார்கள். இந்தநிலையில், சுப்ரீம் கோர்ட்டு இந்த மதிப்பெண்களின் வெளிப்படைத்தன்மையை அனைவரும் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக மீண்டும் நகரங்கள் மற்றும் தேர்வு மையங்கள் வாரியாக முடிவுகள் வெளியிடப்படவேண்டும் என்று உத்தரவிட்டதற்கேற்ப அவ்வாறும் முடிவு வெளியானது.

அதனைத்தொடர்ந்து, சுப்ரீம் கோர்ட்டு மேலும் ஒரு தீர்ப்பையும் வெளியிட்டது. அதில், மறுதேர்வு நடத்தப்பட்டவர்களுக்கும், அந்த தேர்வில் கலந்து கொள்ளாதவர்களுக்கு வழங்கப்பட்ட திருத்தப்பட்ட மதிப்பெண் அடிப்படையிலும், தேர்வில் இயற்பியல் வினாவுக்கு டெல்லி ஐ.ஐ.டி. குழு அளித்த பதிலுக்கு வழங்கிய மதிப்பெண் அடிப்படையிலும் திருத்தப்பட்ட தரவரிசைப் பட்டியலுடன் தேர்வு முடிவுகள் வெளியிடப்படவேண்டும் என்று உத்தரவிட்டது. அதன்படியும் முடிவு வெளியானது. அதில் கடந்த தேர்வு முடிவில் மாணவமாணவிகள் பெற்ற மதிப்பெண் அப்படியே தலைகீழாக மாறியது. இதனால் தரவரிசைப்பட்டியலில் முன்னும், பின்னுமாக மாணவ–மாணவிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆக, இந்த ஆண்டு 'நீட்' தேர்வு முடிவுகள் 3 முறை வெளியிடப்பட்டு, "குழப்பமே உன் பெயர்தான் 'நீட்' தேர்வா? என்று சொல்லும்படியாகி விட்டது. இப்போது 'நீட்' தேர்வு மீது மாணவர்களுக்கும் நம்பிக்கையில்லாத ஒரு நிலை ஏற்பட்டுவிட்டது. இந்தநேரத்தில் தமிழ்நாடு, மேற்குவங்காளம், கர்நாடகா மாநிலங்கள் கோரியபடி 'நீட்' தேர்வை முழுமையாக ரத்துசெய்யவேண்டும் அல்லது `நீட்' தேர்வு வேண்டாம் என்று கூறும் மாநிலங்களுக்கு மட்டுமாவது விலக்கு அளிக்கவேண்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்

### ஆகஸ்ட் 6 (2019)



தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் "கலைஞர் விருது" வழங்கப்பட்டது.

"தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்" என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.